# தமிழ்ப் பேசு

## எங்கு செல்லலாம்?

➤ அம்மா / அப்பா இந்த வாரம் பூங்கா அல்லது நூலகம் சென்று வரலாமா?

➤ அம்மா / அப்பா நாளைக்குக் கடைக்குச் செல்லலாமா?

இது போன்று தாங்கள் விரும்பும் ஏதேனும் இடத்திற்குச் செல்வது குறித்து எளிய வாக்கியத்தில் பேசுவதை வழக்கமாக்கிக் கொள்ளவும்.

**நான் வீட்டுப்பாடம் முடித்துவிட்டேன்.**
**சிறிது நேரம் தொலைக்காட்சிப் பார்க்கப் போகின்றேன் அம்மா / அப்பா.**

தினமும் மாலையில் வீட்டுப்பாடம் படித்து முடித்த பின் அம்மா மற்றும் அப்பாவிடம் தமிழில் இது போன்ற எளிய வாக்கியம் பேசுவதை வழக்கமாக்கிக் கொள்ளவும்.

> மேலே உள்ள வாக்கியங்களைத் தங்களின் வட்டார வழக்கத்தில் (மதுரைத்தமிழ், கொங்கு தமிழ்,..) அல்லது பேச்சு வழக்கத்தில் பேசச் சொல்லிப் பழக்கவும்.